## "அறிவியல் விரைவு" - எதிர்கால வடிவமைப்பு

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட புகைவண்டியில் "அறிவியல் விரைவு" என்ற அறிவியல் கண்காட்சி நடத்தப்படுகிறது. 30 நவம்பர் 2008இல் ஆரம்பிக்கப்பட்டு இந்திய முழுவதும் ஆறு மாதங்களில் 17,000 கிலோமீட்டர் வரை, 51 புகைவண்டி நிலையங்களில் இந்த சிறந்த அறிவியல் கண்காட்சி நடந்து கொண்டு இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் வருகைக்காக மூன்று அல்லது நான்கு நாட்கள் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. இளைஞர்களிடையே அறிவியல் குறித்த ஆர்வத்தை வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கம்.

வெண்மை நிறம் கொண்ட முழுவதும் குளிர்சாதனம் செய்யப்பட்ட 16 இணைப்புப் பெட்டிகளைக் கொண்டது, இந்த நடமாடும் "அறிவியல் விரைவு" கண்காட்சி. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்வதற்காக முந்நூறுக்கும் மேற்பட்ட ஒளி உருக்கள் மற்றும் 150 ஒளி தகடுகளும் ஊடகங்களில் இடம் பெற்றுள்ளன. இந்த கண்காட்சி அனைவருக்கும் பொதுவானது என்றாலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக முதன்மை இடத்தைக் கொடுக்கிறது. அவர்களிடையே அறிவியல் துறையில் ஆர்வத்தை வளர்த்து மேலும் அதனை ஆராய்வதற்கு ஊக்குவிக்கிறது. தொழிற்கூட ஆய்வு மட்டுமல்லாமல் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் அறிவியல் பங்குகொள்கிறது. 21ம் நூற்றாண்டில் உலக சவால்களை அறிவியலின் மூலம் எவ்வாறு சமூகம் எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கற்றுத் தருகிறது. இந்த "அறிவியல் விரைவு" என்ற இந்திய-ஜெர்மன் ஒப்பந்தத் திட்டம், மாண்புமிகு.பிரதமமந்திரி டாக்டர்.மன்மோகன் சிங் மற்றும் ஜெர்மன் வேந்தர் டாக்டர் ஏஞ்சலா மார்கெல் அவர்களால் தொடங்கப்பட்டது. இந்தியா முழுவதும் 57 இடங்களில், 22.53 லட்சம் பார்வையாளர்களை கவர்ந்துள்ளது. மேலும் இதைப்பற்றிய தகவல்கள் அறிய www.science-express.com இணையதள முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

நவம்பர் 30ம் நாள் 2008ல் டெல்லியில் உள்ள சப்தார்ஜங்கில் தொடங்கிய இந்த "அறிவியல் விரைவு" என்ற கண்காட்சி பள்ளி, கல்லூரி மற்றும் பொதுமக்களிடமிருந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. நாடு முழுவதும் இந்த கண்காட்சி இடம்பெற உள்ளது. அதன் கால அட்டவனை இத்துடன் இணைக்கப்பெற்றுள்ளது. ஜெர்மனியில் உள்ள "மேக்ஸ் ப்ளான்க் அமைப்பு" கண்காட்சியில் பெரும் பங்கு வகிக்கிறது. இதன் மூலமாக பார்வையாளர்களுக்கு உலகின் அறிவியல் விந்தைகள், கண்டுபிடிப்புகள், சமீபத்திய சாதனைகள் மற்றும் எதிர்கால தொழில்நுட்பத்திற்கான சிறந்த அறிவியல் அறிவும் கிடைக்கிறது. இந்த கண்காட்சியில், விண்வெளி, பிக்-பேங்க் தியரி, மரபணுவியல், மருத்துவத்துறையில் கணினியின் பங்கு, செல் உயிரியல், உயிரியல் தொழில் நுட்பவியல், மேலும் பல தொழில் நுட்ப ஆராய்ச்சிகளை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த எதிர்கால திட்டங்களைப் பற்றி ஒரு இணைப்பு பெட்டி இயம்புகிறது. இதுமட்டுமல்லாமல் தகவல் தொழில்நுட்ப சாதனைகள், உயிர்தொழில் நுட்பம், விண்வெளி, நேனோ தொழில்நுட்பம், பிறகண்டுபிடிப்புகள் போன்றவையும் பார்வையாளர்களைக் கவரக்கூடியதாய் உள்ளது. பூமி மற்றும் கோள்கள் பற்றிய கண்காட்சியும் உள்ளது. "இன்ப அறிவியல் கூடம்" என்ற இணைப்புப் பெட்டியில் மாணவர்கள் இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதவியல் போன்றவற்றில் செய்முறை செய்ய வசதிகள் உள்ளது. அறிவியல் மற்றும் கணிதத்தில் ஈடுபாடுள்ள மாணவர்களுக்காக VASCSC யால் இந்த இன்ப அறிவியல் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இன்ப அறிவியல் கூடத்தில் 20 மாணவர்கள் கொண்ட சிறிய குழுவிலான உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் பதிவு செய்து கொண்டு பங்கு பெறலாம். இந்த இன்ப அறிவியல் கூடத்தில் பங்குக் கொள்ள vascsc.jos@gmail.com அல்லது ஆய்வுக்கூட பொருப்பாளர் - 09428405408 அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

இந்த "அறிவியல் விரைவு" கண்காட்சிக்கு நுழைவு கட்டணம் கிடையாது. மாணவர்களும், இளைஞர்களும் பெருமளவில் இக்காட்சியில் பார்வையிட்டு புதுமைகளைக் கண்டு பயன் அடையலாம். கூடுதல் தகவலுக்கு www.sciencexpress.in என்ற இணையதளத்தை அணுகவும். இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இந்த அறிவியல் விரைவு திட்டத்திற்கு உறுதுணையாய் உள்ளது. விக்ரம் சாராபாய் தகவல் அறிவியல் மையம், அகமதாபாத் இதன் ஒருங்கிணைப்பாக உள்ளது. அறிவியல் விரைவு கண்காட்சியினை DST, VASCSC's குழுமம் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், அறிவியல் தகவலாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள், பார்வையாளர்களின் வினாக்களுக்கு விடையளிக்கின்றனர். இந்த கண்காட்சியினை பார்வையிட அல்லது தகவல்கள் பெற sciencexpress@gmail.com அல்லது திட்ட ஒருங்கிணைப்பாளர் (09428214281) அவர்களை அணுகவும்.

துறை சார்ந்தவர்கள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் ஒத்துழைப்பால் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டு பெருமளவில் பார்வையாளர்களை பயனடையச் செய்கிறது.

குறிப்பு -

- ❖ உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இக்கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ நுழைவு கட்டணம் எதுவும் இல்லை.
- ❖ கைபேசி, கேமரா, பை, தீப்பெட்டி, புகையிலை, தண்ணீர், கூர்மையான பொருட்கள் போன்றவற்றை எடுத்துச் செல்ல அனுமதி இல்லை.

இடம் - அந்தந்த நகரத்தின் ரயில்நிலையம்,

நேரம - காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை

sciencexpress

QUESTION • EXPLORE • DISCOVER

www.sciencexpress.in

## Sciencexpress Schedule

(30 Nov 2008 – 30 May 2009)

| S. No | STATION | DATES |
|---|---|---|
| 1 | Delhi Safdarjung | 30 Nov 2008 |
| 2 | Udhampur | 02 – 04 Dec 2008 |
| 3 | Kapurthala (RCF) | 05 – 07 Dec 2008 |
| 4 | Chandigarh | 09 – 12 Dec 2008 |
| 5 | Bathinda | 13 – 15 Dec 2008 |
| 6 | Jaisalmer | 17 – 19 Dec 2008 |
| 7 | Ajmer | 20 – 23 Dec 2008 |
| 8 | Udaipur | 24 – 27 Dec 2008 |
| 9 | Rajkot (Bhaktinagar) | 29 Dec 08 –01 Jan 09 |
| 10 | Bhavnagar | 02 – 05 Jan 2009 |
| 11 | Surat | 06 – 09 Jan 2009 |
| 12 | Jalgaon | 10 – 13 Jan 2009 |
| 13 | Badnera | 14 – 17 Jan 2009 |
| 14 | Nagpur | 18 – 22 Jan 2009 |
| 15 | Raipur | 23 – 25 Jan 2009 |
| 16 | Bilaspur | 27 – 30 Jan 2009 |
| 17 | Sambalpur | 31 Jan – 02 Feb 09 |
| 18 | Cuttuck | 03 – 06 Feb 2009 |
| 19 | Berhampur | 07 – 09 Feb 2009 |
| 20 | Waltair (VSKP) | 10 – 13 Feb 2009 |
| 21 | Rajamundry | 14 – 16 Feb 2009 |
| 22 | Ongole | 17 – 19 Feb 2009 |
| 23 | Renigunta | 20 – 22 Feb 2009 |
| 24 | Villupuram | 23 – 25 Feb 2009 |
| 25 | Tiruchchirappalli | 26 – 28 Feb 2009 |
| 26 | Madurai | 01 – 04 Mar 2009 |

| S. No | STATION | DATES |
|---|---|---|
| 27 | Nagercoil | 05 – 07 Mar 2009 |
| 28 | Alappuzha | 08 – 10 Mar 2009 |
| 29 | Palakkad | 11 – 14 Mar 2009 |
| 30 | Kannur South | 15 – 18 Mar 2009 |
| 31 | Madgaon | 19 – 22 Mar 2009 |
| 32 | Ratnagiri | 23 – 25 Mar 2009 |
| 33 | Manmad | 27 – 28 Mar 2009 |
| 34 | Itarasi | 29 – 31 Mar 2009 |
| 35 | Jabalpur (Madanmahal) | 01 – 04 Apr 2009 |
| 36 | Chunar | 05 – 07 Apr 2009 |
| 37 | Garwa Road | 08 – 09 Apr 2009 |
| 38 | Sealdah | 11 – 14 Apr 2009 |
| 39 | Malda Town | 15 – 17 Apr 2009 |
| 40 | New Coochbehar | 18 – 20 Apr 2009 |
| 41 | Chaparmukh | 21 – 23 Apr 2009 |
| 42 | New Tinsukia | 24 – 27 Apr 2009 |
| 43 | Kamakhya | 29 Apr – 01 May 09 |
| 44 | Rangiya | 02 – 03 May 2009 |
| 45 | Siliguri | 04 – 07 May 2009 |
| 46 | Barauni | 08 – 10 May 2009 |
| 47 | Gaya | 11 – 13 May 2009 |
| 48 | Gorakhpur | 14 – 17 May 2009 |
| 49 | Rae Bareli | 18 – 21 May 2009 |
| 50 | Moradabad | 22 – 24 May 2009 |
| 51 | Roorkee | 25 – 27 May 2009 |
| 52 | Delhi Safdarjung | 28 – 30 May 2009 |

राविप्रौसंप NCSTC
RASHTRIYA VIGYAN EVAM PRODYOGIKI
SANCHAR PARISHAD (RVPSP)
Department of Science & Technology
Government of India

VIKRAM A SARABHAI
COMMUNITY SCIENCE CENTRE
Navrangpura, Ahmedabad - 380 009, India
T: +91 79 26302914, 65242006
E: info@vascsc.org W: www.vascsc.org